www.agaram.lk

සියලුම හිමිකම් ඇවිරිණි/ முழுப் பதிப்புரிமையுடையது / All Rights reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

தரம் 06 | முதலாம் தவணைப் பரீட்சை - 2019 | 22 T

சுட்டெண் ......................................

# தமிழ் மொழியும் இலக்கியமும்

நேரம் 2 மணித்தியாலம்

## பகுதி I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

1. "மெத்த வலிப்பெடுக்க "மேனி" நடுநடுங்க" இங்கு மேனி என்பதன் ஒத்தகருத்துச் சொல்
   1. பூமி  2. உடல்  3. நட்பு  4. வியர்வை

2. எல்லோரும் "மகிழ்ச்சி" ஆரவத்துடன் அவனை வழியனுப்பி வைத்தார்கள். இதில் மகிழ்ச்சி என்பதன் ஒத்தபதம்
   1. ஆலோசனை  2. சிநேகம்  3. இலட்சியம்  4. சந்தோஷம்

3. அவர்கள் இருவரும் "நண்பர்கள்" என்பதன் எதிர்ச் சொல்
   1. பகைவர்கள்  2. சகோதர்கள்  3. உத்தமர்கள்  4. குறவர்கள்

4. பாட்டன் என்பதன் எதிர்ச்சொல் பாட்டி என்பது போல "தமையன்" என்பதன் எதிர்ப்பாற் சொல்
   1. தங்கை  2. தலைவி  3. தமக்கை  4.தாதி

5. பறவைகள் பலவிதம் எனும் பாடப்பகுதியின் ஆசிரியர்
   1. நவாலியூர் சோமசுந்தரப் புலவர்  2. கம்பர்
   3. பேராசியர் கோதி  3. கோகிலா மகேந்திரன்

6. "ஔ" என்பது எழுத்தாகும்.
   1. உயிர் நெடில்  2. மெய்  3. உயிர்க்குறில்  4. உயிர்மெய்

7. "கி" எனும் உயிர்மெய் எழுத்திலுள்ள இரு எழுத்துக்களும் எவை?
   1. க் + அ  2. க் + ஒ  3. க் + இ  4. க் + எ

8. ஆண் குரங்கு கடுவன் என்பது போல் பெண் குரங்கு
   1. பெட்டை  2. பேடு  3. பிடி  4. மந்தி

9. "விமல் அழகான படம் வரைந்தான்." இவ்வாக்கியத்தில் உள்ள செயற்படு பொருள்
   1. படம்  2. விமல்  3. அழகான  4. வரைந்தான்

10. "தந்தை மகனுக்கு கடிதம் எழுதினார்" என்பதில் எழுவாய்,
    1. தந்தை  2. மகன்  3. எழுதினார்  4. கடிதம்

11. பின்வருவனவற்றுள் முன்னிலை ஒருமைச் சொல்,
    1. நான்  2. நீ  3. நீங்கள்  4. அவர்

12. காகம் கரைந்தது என்பது
    1. கூட்டுவாக்கியம்  2. கலப்பு வாக்கியம்
    3. தனிவாக்கியம்  4. வியப்பு வாக்கியம்



agaram.lk

Agaram.lk - Keep your dreams alive!

Agaram.lk - Keep your dreams alive!

15. அடியாத மாடு படியாது என்ற பழமொழி உணர்ந்தும் கருத்து
   1. அடிப்பது மாட்டிற்கு  2. மாடு படிக்காது
   3. காலம் மாறி வரும்  4. கண்டிப்பால் திருந்த முடியும்

16. மாடு + கள் என்பதை சேர்த்து எழுதினால்
   1. மாடுகள்  2. மாடுங்கள்  3. மாடுமார்  4. மான்கள்

17. பற்பொடி என்பது பிரித்து எழுதினால்
   1. பள் + பொடி  2.பல் + பொடி  3. பற் + பொடி  4. பால் பொடி

18. வேகமாக வீசிய காற்றினால் மரக்கிளைகள் முறிந்து
   1. விழுந்தது  2. விழுகின்றன  3. வீழ்ந்தன  4. விழும்

19. இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா
   1. வைரவிழா  2. முத்து விழா  3. பவள விழா  4. வெள்ளிவிழா

20. பின்வரும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தினால்
   அ. நீ எழுதிய மடல் கிடைத்தது
   ஆ. கடந்தவாரம்
   இ. உனக்கு எங்கள் பாராட்டுக்கள்
   ஈ. நீ பரீட்சையில் முதலிடம் பெற்றதை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றேன்

   1. ஆ, அ, ஈ, இ  2. ஆ, ஆ, ஈ, இ  3. இ, ஆ, ஈ, அ  4. ஆ, ஈ, அ, இ

Agaram.lk - Keep your dreams alive!
Agaram.lk - Keep your dreams alive!
agaram.lk

## பகுதி II

**முதலாம் வினா உட்பட எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. பின்வரும் தலைப்புகளில் ஒன்றினைத் தெரிவு செய்து 75 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக.
   அ) நான் விரும்பும் பெரியார்
   ஆ) உடைந்த மேசையின் சுயசரிதை
   இ) சுற்றாடலைப் பாதுகாப்போம்
   ஈ) தமிழ் மொழியின் சிறப்பு

(20 புள்ளிகள்)

2. பாடநூலை அடிப்படையாகக் கொண்டு விடை எழுதுக.
   1. தங்கம் விதைத்தால் தங்கம் விளையுமா எனும் பாடத்தை எழுதிய ஆசிரியர் யார்?
   2. எலியும் சேவலும் எனும் உரையாடலில் பங்கு கொள்ளும் பிராணிகள் யாவை?
   3. "ஏமாந்த நாய்" எனும் பாடத்தில் காக்கையிடம் காணப்பட்ட நல்ல பழுக்கம் ஒன்று தருக
   4. மெய் எழுத்துக்கள் எத்தனை அதன் வகைகளைத் தருக.
   5. தந்தை மகனுக்கு எழுதிய கடிதத்தில் உடல் வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச்சத்துக்கள் எவை?

(10 புள்ளிகள்)

3. பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் அமைக்குக.
   1. பிரபஞ்சம்
   2. எச்சம்
   3. மடல்
   4. வலி
   5. வழி

(10 புள்ளிகள்)

4. தரப்பட்டுள்ள அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| ஆண்பால் | பெண் பால் | பலர் பால் | ஒன்றன் பால் | பலவின் பால் |
|---|---|---|---|---|
| ஓடினான் | ஓடினாள் | 1…………… | ஓடியது | 2…………….. |
| பாடினான் | 3………….. | 4…………… | பாடியது | பாடின |
| விழுந்தான் | 5………….. | 6.………….. | விழுந்தது | விழுந்தன |
| 7………….. | உண்டாள் | உண்டார்கள் | 8………… | உண்டன |
| குடித்தான் | 9………… | குடித்தார்கள் | 10……….. | குடித்தன |

(10 புள்ளிகள்)

5. இணைக்குக

| | |
|---|---|
| வெல்லம் | கடவுள் |
| கனி | விருட்சம் |
| மரம் | சீனி |
| ஆழி | பழம் |
| இறை | கடல் |

(10 புள்ளிகள்)

6. உமது பிறந்த நாள் விழாவிற்கு வருகை தருமாறு நண்பனை அழைத்து 50 சொற்களில் கடிதம் எழுதுக.

(10 புள்ளிகள்)

Agaram.lk - Keep your dreams alive!
Agaram.lk - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk